## தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(05.09.2015 முதல் 09.09.2015 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்இ ஆடுதுறை – 612 101

போன் 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881


=====================================================================

தேதி 04.09.15

### கடந்த 3 நாளில் நிலவிய வானிலை (01.09.2015 – 03.09.2015)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 6.2 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 37-38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 28-29 |
| மேக மூட்டம் | 3 |
| ஈரப்பதம் (ீ) | 68-76 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 5 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1<br>05,09,15 | தேதி-2<br>06,09,15 | தேதி-3<br>07,09,15 | தேதி-4<br>08,09,15 | தேதி-5<br>09,09,15 |
| மழை (மி.மீ) | 3 | 3 | 5 | 5 | 5 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 37 | 37 | 37 | 37 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 28 | 28 | 28 | 28 | 28 |
| மேக மூட்டம் | 5 | 5 | 5 | 6 | 6 |
| ஈரப்பதம் (ீ) | 62-70 | 62-70 | 60-72 | 60-72 | 58-72 |
| காற்றின் வேகம் (கி.மீ.,மணிக்கு) | 5 | 5 | 5 | 5 | 5 |
| காற்றின் திசை | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு | வடமேற்கு |

05.09.15 முதல் 09.09.15 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 3 -5 மி.மீ.

### *வேளாண் அறிவுரைகள்*

**முக்கிய பயிர்கள் நெல்இ கரும்பு மற்றும் வாழை**

**பருவம்¨ நெல் பூக்கும் பருவம் சம்பா நாற்றங்கால் மற்றும் நடவு பருவம்**

- சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம்? 10 கிலோ ஜிங்சல்பேட்? 15 கிலோ யூரியா? 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உர்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**இயக்குநர்**